## டிசம்பர் – 17 – திங்கள்

### புனித ஒலிம்பியாஸ்

### அவர் உம் மக்களை நீதியோடு ஆள்வாராக! திபா. 72:2

----------------------------------------------------------------

### முதல் வாசகம் : தொடக்க நூல் 49 : 2, 8 - 10

கூடிவந்து உற்றுக்கேளுங்கள் யாக்கோபின் புதல்வர்களே! உங்கள் தந்தையாகிய இஸ்ரயேலுக்குச் செவிகொடுங்கள். யூதா! உன் உடன்பிறந்தோர் உன்னைப் புகழ்வர். உன் கை உன் எதிரிகளின் கழுத்தில் இருக்கும். உன் தந்தையின் புதல்வர் உன்னை வணங்குவர். யூதா! நீ ஒரு சிங்கக்குட்டி, என் மகனே, இரை கவர்ந்து வந்துள்ளாய்! ஆண் சிங்கமென, பெண் சிங்கமென, அவன் கால் மடக்கிப்படுப்பான் அவன் துயில் கலைக்கத் துணிந்தவன் எவன்? அரசுரிமை உடையவர் வரும்வரையில் மக்களினங்கள் அவருக்குப் பணிந்திடும் வரையில், யூதாவைவிட்டுச் செங்கோல் நீங்காது அவன் மரபை விட்டுக் கொற்றம் மறையாது

**பதில்பாடல் :** ஆண்டவருடைய சமாதானம் என்றென்றும் நிலவுவதாக

### நற்செய்தி : மத்தேயு 1 : 1 - 17

தாவீதின் மகனும் ஆபிரகாமின் மகனுமான இயேசு கிறிஸ்துவின் மூதாதையர் பட்டியல்: ஆபிரகாமின் மகன் ஈசாக்கு ஈசாக்கின் மகன் யாக்கோப்பு. யாக்கோபின் புதல்வர்கள் யூதாவும் அவர் சகோதரர்களும். யூதாவுக்கும் தாமாருக்கும் பிறந்த புதல்வர்கள் பெரேட்சும் செராகும் பெரேட்சின் மகன் எட்சரோன் எட்சரோனின் மகன் இராம். இராமின் மகன் அம்மினதாப்பு அம்மினதாபின் மகன் நகசோன் நகசோனின் மகன் சல்மோன். சல்மோனுக்கும் இராகாபுக்கும் பிறந்த மகன் போவாசு போவாசுக்கும் ரூத்துக்கும் பிறந்த மகன் ஓபேது. ஓபெதின் மகன் ஈசாய். ஈசாயின் மகன் தாவீது அரசர் தாவீதுக்கு உரியாவின் மனைவியிடம் பிறந்த மகன் சாலமோன். சாலமோனின் மகன் ரெகபயாம் ரெகபயாமின் மகன் அபியாம் அபியாமின் மகன் ஆசா. ஆசாவின் மகன் யோசபாத்து யோசபாத்தின் மகன் யோராம் யோராமின் மகன் உசியா. உசியாவின் மகன் யோத்தாம் யோத்தாமின் மகன் ஆகாசு ஆகாசின் மகன் எசேக்கியா. எசேக்கியாவின் மகன் மனாசே. மனாசேயின் மகன் ஆமொன் ஆமொனின் மகன் யோசியா. யோசியாவின் புதல்வர்கள் எக்கோனியாவும் அவர் சகோதரர்களும். இவர்கள் காலத்தில்தான் யூதர்கள் பாபிலோனுக்குச் சிறைப் பிடித்துச் செல்லப்பட்டார்கள். பாபிலோனுக்குச் சிறைப்பிடித்துச் செல்லப்பட்ட பின்பு எக்கோனியாவுக்குப் பிறந்த மகன் செயல்தியேல் செயல்தியேலின் மகன் செருபாபேல். செருபாபேலின் மகன் அபியூது அபியூதின் மகன் எலியாக்கிம் எலியாக்கிமின் மகன் அசோர். அசோரின் மகன் சாதோக்கு சாதோக்கின் மகன் ஆக்கிம் ஆக்கிமின் மகன் எலியூது. எலியூதின் மகன் எலயாசர் எலயாசரின் மகன் மாத்தான் மாத்தானின் மகன் யாக்கோபு. யாக்கோபின் மகன் மரியாவின் கணவர் யோசேப்பு. மரியாவிடம் பிறந்தவரே கிறிஸ்து என்னும் இயேசு. ஆக மொத்தம் ஆபிரகாம்முதல் தாவீது வரை தலைமுறைகள் பதினான்கு. தாவீது முதல் பாபிலோனுக்குச் சிறைப்பிடித்துச் செல்லப்பட்டவர்கள் வரை தலைமுறைகள் பதினான்கு பாபிலோனுக்குச் சிறைப்பிடித்துச் செல்லப்பட்டவர்கள் முதல் கிறிஸ்து வரை தலைமுறைகள் பதினான்கு.

**தியானம்:** மத்தேயு இயேசுவின் மூதாதையர் பட்டியலைக் கொடுத்ததன் காரணம் இயேசுவின் மூதாதையர் யார் யார் என்ற வரலாற்று உண்மையை நமக்கு வழங்குவதற்காக. உதாரணமாக தாவீது முதல் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டது வரை தலைமுறைகள் பதினான்கு என்று மத்தேயு கூறுகின்றார். இங்கு நாம் புரிந்து கொள்ள வேண்டியது மத்தேயுவின் நோக்கம் இயேசுவைப்பற்றிய இறையியல் உண்மையைத் தருவதேயன்றி வரலாற்று உண்மையைத் தருவதல்ல என்பது தான். மத்தேயு இயேசுவின் மூதாதையர் பட்டியலைத் தரக்காரணம் என்ன ? 1)இயேசுவின்மூதாதையரின் (இயேசுவிற்கு முந்திய தலைமுறையினர்களின்) ஏக்கங்களும் தேடல்களும்இயேசுவில் நிறைவேறுகின்றன என்ற உண்மையைச்சுட்டிக்காட்டும்முகமாக 2) மெசியாவாகிய இயேசு தாவீது குலத்தைச் சார்ந்தவர் என்ற உண்மையை எடுத்துரைப்பதற்காக.3) இயேசு யூதர்களை மட்டுமல்ல புறவினத்தார்களையும் , பாவிகளையும் மீட்க வந்தார் .என்ற உண்மையை பறைசாற்றுவதற்காக 4)மீட்பின் வரலாற்றை இயக்கும் உண்மையானவர் கடவுள் என்பதை எடுத்துரைப்பதற்காக மீட்பின் வரலாறு உலக வரலாற்றில் இடம்பெற்றிருக்கிறதுஎன்பதற்கான ஆதாரங்கள் காட்டுவதற்காக மத்தேயு மூதாதையர் பட்டியலைக் கொடுத்ததன் காரணமாகத்தான் நாம் அனைவரும் இயேசுவைப்பற்றியும் அவருடைய உண்மையான நிலையைப்பற்றியும் அறிந்தோம். எனவேஇயேசுவின் வரலாற்றில் கடவுள் செயல்பட்டது போல நம் வரலாற்றிலும் கடவுள் செயல்படுகின்றார் என்பதை உணர்ந்து அதைக் கண்டுணர முற்படுவோம்.